மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாற்று ஏற்பாடு என்று செய்வது இயலாத காரியம். ஆனால் அத்தகைய சங்கங்கள் எல்லாம் நுகர்பொருள்களை விநியோகம் செய்யக் கூடிய அளவிற்கு நுகர்பொருள் பயன்படுத்துகிற விவசாயிகள் வாங்கிய கடன்களை கண்டிப்பாகத் திருப்பிக்கட்ட வேண்டும். நுகர் பொருள்களுக்கென மைய வங்கிகள் மூலம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அதிலும் குறிப்பாக நலிந்த பிரிவினருக்கு நன்மை தருகிற ஒரு பிரிவாகயிருப்பதால் நுகர்பொருள் விநியோகம் தங்குதடையின்றி செயல்பட அரசு நடவடிக்கை எடுக்கும்.

கோவை மாவட்டத்திலுள்ள தேசிய பஞ்சாலை தொழிலாளர்களுக்கு மிகை ஊதியம்.

*வினா எண். 111—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) கோவை மாவட்டத்தில் உள்ள தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் மில்களில் தொழிலாளர்களுக்கு சென்ற தீபாவளிக்கு போனஸ் அட்வான்ஸ் மட்டும் கொடுத்து போனஸ் கணக்கு தீர்த்துக் கொடுக்காமலிருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் மற்ற பஞ்சாலைகளில் கொடுக்கப்பட்ட அளவுக்கு இந்த மில்களிலும் கொடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்:

(அ) தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷன் மில்களின் நிர்வாகத்திற்கும் தொழிலாளர்களுக்கும் கோவை தொழிலாளர் துறை துணை ஆணையர் முன் 18-10-79-ம் தேதி ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் ஒவ்வொரு தொழிலாளிக்கும் ரூ. 1,300/- போனஸ் பிரச்சினை குறித்து முன் பணமாக வழங்கவும், தொழிலுக்கேற்ற ஊதியம் பெறாத தொழிலாளி ஒவ்வொரு வருக்கும் ரூ. 650/-ம் கொடுக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. அதன் பிறகு 31-10-80 அன்று நடந்த பேச்சு வார்த்தைகளின்படி போனஸ் 1-11-80 நாளன்றும், கூடுதல் பணம் (Ex-gratia) 4-11-80 நாளன்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கப்பட்டது.

(ஆ) இந்நிலையில் அரசு இதில் தலையிடும் பிரச்சினைக்கு இடமில்லை.

திரு. கு. ரமணி: தொழிலாளர்களுடைய இந்த ஆண்டு போனஸ் பிரச்னை மத்திய அமைச்சர்கள் மூலம்பேசி நடவடிக்கை எடுக்கப்பட்டு அது ஒரு அறைகுறையான முடிவுக்கு வந்துள்ளது உண்மை. ஆனால் 1964-ல் 10% அதிக போனஸ் தொழிலாளர் களுக்குக் கொடுக்கப்பட்டது. இந்த தேசிய பஞ்சாலை

1981 ஜனவரி 30]

கார்ப்பரேஷன் கீழ் உள்ள மில்களில் அந்தக் கணக்கை இன்னும் முடிக்காமல் அந்த 10% போனஸ் வாங்கியவர்கள் யாராவது வேலையை விட்டு நின்று விட்டால் அது பிடிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பிரச்னையை சுமுகமாகத் தீர்த்து வைக்க அமைச்சர் அவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, 1978–79, 1979–80 ஆண்டுகளுக்கான போனஸ் பற்றிய தகவல் என்னிடத்தில் இருக்கிறது. போனஸ் எக்ஸ்–கிரேசியாஸ் ஆனால், 74-ஐப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் கேள்வி மூலம் தெரிந்துகொள்ள வேண்டுமென்றால், அதற்குத் தனிக் கேள்வி போடட்டும். நான் தலையிட்டுப் பேச்சுவார்த்தை பேச வேண்டு மென்றால், தனி மனு கொடுத்தால் அதை ஆராயலாம்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்த விஷயம்பற்றி பல தடவைகள் தொழிலாளர் நல இலாகாவிற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது; அதைச் சரியான முறையில் கவனிக்கப் படவில்லை என்று அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, தேசிய பஞ்சாலை கார்ப்பரேஷனுக்கு கீழ் தமிழ் நாட்டில் சுமார் 14 மில்களில் ஏற்படும்படியான பிரச்னைகளில் போதிய அளவு துரிதமாக தமிழக அரசு சார்பில் அமைச்சரும் இலாகாவும் தலையிடாத ஒரு குறைபாடு இருக் கின்றது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இந்தக் குறையைத் தீர்ப்பதற்கு தகுந்த நடவடிக்கைகளை எடுப்பார்களா? சம்பந்தப்பட்ட பிரச்னையில் ஏதாவது தீர்வு காண்பார்களா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, பலமுறை தலையிட்டு, கஷ்டப்பட்டுக் கொண்டு வந்திருக்கிறேன். என்னுடைய ஞாபகம் சரியாக இருக்குமானால் துரைசாமி, ஐ.ஏ.எஸ். என்ற அதிகாரியோடு பேசியிருக்கிறேன். இதனால் அந்த ஒப்பந்தம் வந்திருக்கிறது என்று கருதிக் கொண்டிருக்கிறேன். 1978–79, 1979–80-க்கான கணக்குகள் என்னிடத்திலே இருக்கிறது. இதற்கு முன் பாக்கி இருக்குமானால் என்னிடத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வந்து பேசலாம். மனு கொடுக்கலாம், இருவரும் சேர்ந்து அதற்குரிய முயற்சிகளில் ஈடுபடலாம்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, தேசிய பஞ்சாலைகளைப் பொறுத்த வரையில், எதிர் காலத்தில் இப்படிப்பட்ட பிரச்னைகளில் காலதாமதம் ஆகாமல் இருப்பதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏதாவது அதிகாரபூர்வமாக ஒரு கமிட்டியை அமைக்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்பேர்ப்பட்ட உத்தேசம் இப்போது இல்லை.